# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW4 |
| Name | : | திருமதி. வள்ளி |
| Father's Name | : | கோவிந்தன் |
| Village | : | சின்னமணவாரணப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி வேலை |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 01st day of August 2024.

Accused present.

<u>முதல் விசாரணை :-</u>

நான் சின்னமணவாரணபள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து போன கணேசன் எனது கணவர் ஆவார். 04.11.2018 அன்று நான் வேலைக்கு சென்று விட்டு வரும்போது, மதியம் 12.00 மணி அளவில் எனது நாத்தனார் சிவகாமி என்பவர் எனக்கு செல்போன் மூலம் வழக்கு விபத்து சம்பந்தமாக தகவல் தெரிவித்தார். சிக்காரி மேடு, குர்குரே கம்பெனி எதிரே எனது கணவர் TN 24 S 1788 என்ற இரு சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது பின்னால் வந்த மகேந்திரா டெம்போ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் எனது கணவரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனயில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளதாகவும் கேள்விப்பட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றுப் பார்த்தேன். எனது கணவருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டு பேச முடியாத நிலையில் இருந்தார். அவரை மேல் சிகிச்சைக்காக

பெங்களூருக்கு அழைத்துச் செல்லும் வழியில் இறந்து விட்டார். ஒசூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து நடைபெற்ற பிரேத விசாரணையின் போது போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக குருபரப்பள்ளி போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

எனக்கு விபத்து சம்பந்தமாக தகவல் கொடுத்த சிவகாமி என்னுடன் வேலை செய்து வந்தார். மேற்படி சிவகாமியும் வழக்கு சம்பவம் குறித்து கேள்விப்பட்ட நபர் ஆவார். நான் சம்பவ இடத்தை சென்று பார்க்கவில்லை நேரடியாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு தான் சென்றேன். வழக்கு சம்பவ இடம் ஒசூரில் இருந்து கிருஷ்ணகிரி வரும்போது சாலையின் இடது புறம் உள்ளது. நான் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்பதால் மேற்படி சாலையின் எந்த இடத்தில் விபத்து நடைபெற்றது என்று என்னால் கூற இயலாது. இரு சக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ், காப்பீட்டு பாலிசி, எனது கணவரின் ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை போலீசார் விசாரணையின் போது நான் கொடுத்தேன். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. எனது கணவர் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு காப்பீடும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எனவே யாருடைய அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் விபத்து நடைபெற்றது என்பது எனக்கு நேரடியாக தெரியாது.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.ஆர். சாமுவேல் பெஞ்சமின்
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**KRISHNAGIRI.**

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW5 |
| Name | : | திரு. லட்சுமணன் |
| Father's Name | : | முனியப்பன் |
| Village | : | நரணிக்குப்பம் |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | பெட்ரோல் பங்கில் காசாளர் |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 01st day of August 2024.

Accused present.

<u>முதல் விசாரணை :-</u>

நான் நாணிக்குப்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். பெட்ரோல் பங்கில் கேசியராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்து போன கணேசன் எனது பெரியப்பா மகன் ஆவார். 04.11.2018 அன்று நான் பெட்ரோல் பங்கில் வேலை செய்து கொண்டிருந்த போது எனது அண்ணி வள்ளி என்பவர் செல்போன் மூலம் விபத்து குறித்து எனக்கு தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் விபத்து நடந்த இடமான குர்குரே கம்பெனி உள்ள இடத்திற்கு சென்றேன். அங்கு விபத்தில் சம்பந்தப்பட்ட இரு சக்கர வாகனமும் டெம்போவும் இருந்தது. விபத்தில் எனது அண்ணன் கணேசனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவர் மயக்க நிலையில் இருந்தார். அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்திருந்தார்கள். ஆம்புலன்ஸ் வந்த உடன் நான் எனது அண்ணனை ஆம்புலன்ஸில் ஏற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக

சேர்த்தேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக பெங்களூருக்கு ஆம்புலன்ஸில் எனது அண்ணனை அனுப்பி வைத்தேன். வழியில் எனது அண்ணன் இறந்து போனதால் ஒசூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு வைத்து பிரேத விசாரணையும், பிரேத பரிசோதனையும் நடைபெற்றது. விபத்து நடந்த இடத்தில் பொது மக்கள் கூட்டமாக இருந்தார்கள். அதில் ஆஜர் எதிரியும் உடன் இருந்தார். இவ்வழக்கு சம்பந்தமாக குருபரப்பள்ளி போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

எனக்கு காலை 11.00 மணிக்கு தகவல் கிடைக்கப் பெற்றது. நான் உடனடியாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு தான் சென்றேன். மேற்படி மருத்துவமனைக்கு செல்லும் போது மதியம் 12.00 மணி ஆகும். பின்னர் மதியம் 01.00 மணிக்கு மேல் சிகிச்சைக்காக எனது அண்ணனை பெங்களூரு கொண்டு சென்றோ. அரசு மருத்துவமனையில் எனது அண்ணனை நான் பார்க்கும் போது அவர் மயக்க நிலையில் இருந்தார். போலீசார் எனது அண்ணனின் உறவினர்கள் யார் என்று கேட்டு விசாரித்த போது என்னையும் விசாரித்தார்கள் அப்போது நான் மேற்கண்ட விவரங்களை தான் சொன்னேன். நான் விபத்து சம்பந்தமாக கேள்விப்பட்ட உடன் நேரடியாக அரசு மருத்துவமனைக்கு தான் சென்றதால் விபத்து நடந்த பகுதிக்கு சென்றதாகவும் அங்கு வாகனங்கள் கிடந்ததாகவும் யாரெல்லாம் இருந்தார்கள் என்பது சம்பந்தமாகவும் போலீசார் விசாரணையில் கூறவில்லை. நீதிமன்றத்தில் எதிரியை அடையாளம் காண்பித்ததன் அடிப்படையில் தான் நான் எதிரியை இன்று அடையாளம் காண்பித்தேன் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.ஆர். சாமுவேல் பெஞ்சமின்
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW6 |
| Name | : | திரு. சந்திரன் |
| Father's Name | : | முனியப்பன் |
| Village | : | நரணிக்குப்பம் |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி வேலை |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 01st day of August 2024.

Accused present.

முதல் விசாரணை :-

நான் நாணிக்குப்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் தொழில் செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து போன கணேசன் எனது சித்தப்பா மகன் ஆவார். அ.சா.5 லட்சுமணன் எனது பெரியப்பா மகன் ஆவார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு காலை 11.00 மணி அளவில் நான் ஊரில் இருக்கும்போது எனக்கு போன் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சிக்காரிமேடு சென்றுப் பார்த்த போது கணேசன் விபத்தினால் காயம் பட்டு கீழே விழுந்து கிடந்தார். அவர் இரு சக்கர வாகனத்தில் சென்ற போது டெம்போ வாகனம் பின்னால் வந்து மோதியதாக கேள்விப்பட்டேன். மேற்படி இரண்டு வாகனங்களும் சம்பவ இடத்தில் கிடந்தது. பின்னர் காயம் பட்ட கணேசனை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக சேர்த்தோம். நானும் மேற்படி ஆம்புலன்ஸில் உடன் சென்றேன். சம்பவ இடத்தில் நிறைய நபர்கள் இருந்தார்கள். ஆஜர் எதிரியும்

சம்பவ இடத்தில் இருந்தார். பின்னர் மேல் சிகிச்சைக்காக கணேசனை 108 ஆம்புலன்ஸ் மூலம் பெங்களூரு அழைத்துச் சென்றேன். வழியிலேயே கணேசன் இறந்து போய் விட்டதால் அரசு மருத்துவமனையில் வைத்து நடைபெற்ற பிரேத விசாரணையின் போது நான் கலந்து கொண்டேன். இவ்வழக்கு சம்பந்தமாக குருபரப்பள்ளி போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

எனக்கு விபத்து குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்று ஞாபகமில்லை. தகவல் கிடைத்த உடன் நானும், லட்சுமணனும், ஸ்ரீராமன் என்பவரும் நேரடியாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை சென்றோம். அங்கு கணேசன் மயக்க நிலையில் சிகிச்சையில் இருந்தார். பின்னர் மதியம் 02.00 மணியளவில் கணேசனை மேல் சிகிச்சைக்கான பெங்களூரு அழைத்துச் சென்றார்கள். அழைத்துச் செல்லும் வழியில் அவர் இறந்து போய் விட்டார். எனவே ஒசூர் அரசு மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை நடைபெற்றது. ஒசூர் அரசு மருத்துவமனையில் வைத்து தான் உறவினர்கள் யாரெல்லாம் வந்துள்ளார்கள் என்று விசாரித்த போது என்னையும் விசாரணை செய்தார்கள். அப்போது விபத்தை கேள்விப்பட்டு நேரடியாக அரசு மருத்துவமனைக்கு வந்த விவரத்தை பற்றி போலீசாரிடம் கூறினேன். அதை தவிர வேறு விவரங்களை போலீஸ் விசாரணையின் போது கூறவில்லை. நான் விபத்து நடந்த இடத்தை சென்று பார்க்கவில்லை. எதிரியை வழக்கு சம்பவ இடத்தில் வைத்து நான் பார்த்தேன் என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் விபத்து நடைபெற்ற இடத்திற்கு நான் செல்ல வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரிதான். நான் இன்று தான் எதிரியை முதன்முதலாக பார்க்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

ஓம் /- திரு.ஆர். சாமுவேல் பெஞ்சமின்
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW7 |
| Name | : | திரு. ஸ்ரீராமன் |
| Father's Name | : | வெங்கடசாமி |
| Village | : | V. மாதேபள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி வேலை |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 01st day of August 2024.

Accused present.

முதல் விசாரணை :-

நான் வி.மாதேபள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன கணேசன் என் உடன் பிறந்த அக்காள் மகன் ஆவார். சாட்சிகள் லட்சுமணன், சந்திரன் எனது உறவினர்கள் ஆவர். 04.11.2018 அன்று நான் ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருந்த போது காலை 11.30 மணி அளவில் எனது அக்காள் சிவகாமி விபத்து குறித்து போன் மூலம் தகவல் தெரிவித்தார். கணேசனை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தகவல் தெரிவித்தார்கள். அதன் பிறகு நானும் எனது மனைவியும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தோம். அதற்கு முன்பே கணேசனை மேல் சிகிச்சைக்காக பெங்களுரு அழைத்துச் சென்று விட்டனர். பெங்களுரு செல்லும் வழியிலேயே கணேசன் இறந்து போய் விட்டதால் ஒசூர் அரசு மருத்துவமனையில் வைத்து நடைபெற்ற பிரேத

விசாரணையின் போது நான் கலந்து கொண்டேன். இவ்வழக்கு சம்பந்தமாக குருபரப்பள்ளி போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று ஞாபகமில்லை. என்னுடன் சாட்சிகள் லட்சுமணன், சந்திரன் ஆகியோர் உடன் வரவில்லை. மருத்துவமனையில் வைத்து லட்சுமணன், சந்திரன் ஆகியோரை நான் பார்க்கவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. இறந்து போனவர் எனது உறவினர் என்பதால் நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேனே தவிர இவ்வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.ஆர். சாமுவேல் பெஞ்சமின்
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.